செய்தி வெளியீடு எண்: 593 நாள்:15.09.2019

# இன்று (15.9.2019), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் ஈஷா யோகா மையத்தின் சார்பில் சென்னை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மரம் நடும் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆற்றிய உரை

மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தி மரக்கன்றுகள் நட்டு தமிழ்நாட்டின் பசுமைப் போர்வையை உயர்த்துவதை இலக்காக கொண்டு அமைக்கப்பட்டுள்ள ஈஷா யோகா மையத்தின் ஒரு அமைப்பான பசுமைக் கரங்கள் இயக்கத்தின் சார்பில் இன்று நடைபெறும் மரம் நடும் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழாவிலே கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றவிருக்கின்ற மாண்புமிகு ஆளுநர் அவர்களே!

சிறப்புரையாற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய தமிழ்மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு.ஜி.கே.வாசன் அவர்களே!

இங்கே, சிறப்பான நிகழ்ச்சிக்கு கதாநாயகனாக விளங்கிக் கொண்டிருக்கின்ற, தலைமையுரையாற்றிய சத்குரு அவர்களே!

அப்பல்லோ மருத்துவமனையின் தலைவர் அவர்களே!

திருமதி சுகாசினி மணிரத்னம் அவர்களே!

வருகை தந்திருக்கின்ற பெரியோர்களே! தாய்மார்களே!

பத்திரிக்கை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

மற்றும் இவ்விழாவில் கலந்து கொண்டுள்ள உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மரங்கள் மண்ணின் வளங்கள், காற்றின் கரங்கள், மரங்கள் மண்ணை மருதாணியாய் குளிர்விக்கின்றது. நிலங்களுக்கு மரகதப் போர்வை போர்த்தி அழகு

பார்க்கின்றன. மரங்கள் பாதசாரிகளுக்கு நிழற்குடை, பயணிக்குத் தங்கும் விடுதி, பறவைகளுக்கு சரணாலயம், அது இனிமையின் சாசனம், இயற்கையின் வாசம்.

**நிழலின் அருமை வெயிலில்தான் தெரியும்** என்பது பழமொழி. நாம் அனைவரும் நிழலின் அருமையை உணர்ந்துள்ள இவ்வேளையில், நிழலினை உருவாக்க மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பதும், நிழல் தரும் மரங்களைக் காப்பதும் நம் அனைவரின் கடமையாகும்.

மரங்களால் சுவாசக் காற்று அதிகரிக்கின்றது, நில அரிப்பு தடுக்கப்படுகின்றது. மழை மாதந்தோறும் பொழிவதற்கு மண்ணின் மீதுள்ள மரங்களே அழைத்திடுகிறது.

**மரம் நடுவோம்! மழை பெறுவோம்!** என்ற வாசகம் நாம் அனைவரும் அறிந்ததே, மரங்கள் மழை கொடுக்க வேண்டுமென்றால் நமக்குத் தேவை காடுகள். காடுகள் மனிதர்களால் உருவாக்கப்படுவதில்லை, மனிதன் நட்ட மரங்களைவிட மண்ணே நட்ட மரங்களே அதிகம். கரங்கள் நட்ட மரங்களைவிட காற்றே நட்ட மரங்களே அதிகம்.

ஒற்றை மரம், ஒரு நாளைக்கு சராசரியாக சுமார் 300 லிட்டர்கள் வரை தண்ணீரைத் தன்னுடைய வியர்வையாக வெளியேற்றுகிறது. மரங்கள் தங்களது தேவையான நீரைவிடப் பல மடங்கு அதிகமான நீரை உறிஞ்சிக் கொள்ளும். அந்த உபரி நீர் அவ்வளவும் வெளியாகி ஈரப்பதமாக காற்றில் கலந்து விடுகிறது. அந்த உபரி நீர்தான் காற்றைக் குளிர்வித்து நம்மையும் குளிர்விக்கின்றன. அந்த உபரி நீரை கொண்டுதான் மேகங்களும் நமக்கு மழையை கொடுக்கின்றன.

இந்தியத் திருநாட்டின் கலாச்சாரத்தில் மரம் ஒரு இன்றியமையாத பங்கு வகிக்கிறது. எடுத்துக்காட்டாக, நாம் வேப்ப மரத்தினை மாரியம்மன் தெய்வத்தினோடும், அரச மரத்தினை விநாயகப் பெருமானோடும் எப்பொழுதும் இணைத்து வழிபடுவது வழக்கம். இன்றும் பல்வேறு பழங்குடியின மக்களின் சடங்குகளில், குறிப்பாக திருமண சடங்குகளில் மரத்தினை வணங்கி திருமணத்தை நடத்துவது வழக்கமாக கடைபிடிக்கப்படுகின்றது.

மருது சகோதரர்கள் நினைவாக மரங்கள் இரண்டினை வளர்த்து வந்த ஓர் பெரியவர், அம்மரங்களை அரசரே ஆணையிட்டும் வெட்ட அனுமதிக்காத நிகழ்வு மக்களுக்கு மரத்தின் மீது இருந்த அக்கறையினை உணர்த்துகிறது.

**மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்**
**காடும் உடையது அரண்.**

இதன் பொருள், மணிபோல் தெளிந்த நீரும், நிலமும், மலையும், அழகிய நிழல் உடைய காடும் ஒரு நாட்டின் அரண் ஆகும் என்பதை வலியுறுத்தி தெய்வப்புலவர் திருவள்ளுவர் திருக்குறளில் குறிப்பிட்டுள்ளார்.

மாண்புமிகு அம்மா அவர்களின் பிறந்த தினத்தையொட்டி, மாநிலத்தில் பசுமைப் போர்வையினை அதிகரித்தல், சுற்றுச்சூழல் மாசினால் ஏற்படும் விளைவுகளைக் குறைத்தல் ஆகிய நோக்கங்களைக் கொண்டு **மாபெரும் மரம் நடவுத் திட்டம்** மாண்புமிகு அம்மா அவர்களால் துவக்கப்பட்டது. தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசாலும் 2011–12 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு, 4 கோடியே 69 லட்சம் மரக்கன்றுகள் நடவு மற்றும் பராமரிப்பு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 2019–20ஆம் ஆண்டில் 71 லட்சம் மரக்கன்றுகள் நடுவதனை இலக்காக கொண்டு இந்த திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

- முழுமையடையாத வனப்பகுதிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் 71 லட்சம் மரக்கன்றுகளும்,
- காப்பு வனங்களுக்கு வெளியே மரப்பரப்பை அதிகரிக்கவும், வேளாண் பெருங்குடி மக்களின் வருமானத்தைப் பெருக்குவதற்கும், **தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டத்தின்** கீழ் தனியார் நிலங்களில் சுமார் 8 கோடி மரக்கன்றுகளும்,
- காவேரி ஆற்றுப்படுகைகளில் மண்ணரிப்பைத் தடுக்கவும், மரப் போர்வையினைஅதிகரிக்கவும், **தேக்குமரம் நடும் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில்** 2.40 லட்சம் தேக்கு மரக்கன்றுகளும்,
- **வேளாண் காடுகள் திட்டத்தின்** கீழ் 9 லட்சம் மரக்கன்றுகளும்,
- மண் அரிப்பை தடுக்கவும், ஈரத் தன்மையை பாதுகாக்கவும், பனை மரத்தை நம்பியுள்ள மக்களின் வாழ்வாதரத்தை உறுதி செய்யும் வகையிலும், தமிழ்நாட்டின் மாநில மரமான **பனை மரங்களை நடுதல் மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ்** ஆண்டிற்கு இரண்டு லட்சம் பனை விதைகளும் இதுவரை தமிழ்நாட்டில் நடப்பட்டுள்ளன.
- மேலும், வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறை மூலமாக 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டு 2.5 கோடி பனை விதைகளை நடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

தமிழ்நாடு சந்திக்க உள்ள சவால்களை முழுவதுமாக உணர்ந்து தான் மாண்புமிகு அம்மாவின் அரசு **மாநில வனக் கொள்கை, 2018**ஐ வடிவமைத்துள்ளது. இந்தக் கொள்கையில் மாநிலத்தின் நீண்ட நெடும் கடற்கரை, கிழக்கு மற்றும் மேற்கு மலைத் தொடர்கள், வறண்ட பருவநிலை மற்றும் நீர் பற்றாக்குறையை போக்க வேண்டிய பாங்கு, வனப்பகுதிகளுக்கு வெளியேயும் மரங்களை வளர்த்து அதன் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

மரங்கள் அதிகரிக்கும்போது காற்று குளிர்கிறது. வாயு மண்டலத்தில் உள்ள தட்பவெப்ப நிலையும் சீராகின்றது. கார்பன்டை ஆக்ஸைடின் அடர்த்தி அதிகரிக்காமல் இருக்கிறது. ஓசோன் மண்டலம் பாதுகாக்கப்படுகிறது. பயிர்கள் செழிக்கின்றன. நோய்கள் குறைகின்றன. நீர்வளம் பாதுகாக்கப்படுகின்றது. தொழில்கள் முன்னேறுகின்றன. ஆரோக்யமான மனித வளம் நாட்டில் பெருகுகின்றது.

இதேபோன்று, சுற்றுச் சூழல் மாசினை கட்டுப்படுத்த **தமிழ்நாடு சூழல் சுற்றுலாக் கொள்கை, 2017** மற்றும் **தமிழ்நாடு சுற்றுசூழல் கொள்கை, 2017** அறிவிக்கப்பட்டு, பல்வேறு நடவடிக்கைகள் மாண்புமிகு அம்மாவின் அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன.

காவேரி ஆற்றின் பல்லுயிர் காத்தல், காவேரி மற்றும் அதன் துணை நதிகளில் மாசுகளை அகற்றுதல், காவேரி நகர்ப்புற கழிவு நீரை சுத்திகரிக்க தேவையான சுத்திகரிப்பு ஆலைகளை நிறுவுதல், ஆற்றுப்படுகையில் மரங்களை நட்டு காடுகளை வளர்த்தல், ஆற்று முகப்பு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள **"நடந்தாய் வாழி காவேரி"** என்ற திட்டத்தினை செயல்படுத்த மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் நான் கோரிக்கை வைத்தேன். அதன் தொடர்ச்சியாக **"நடந்தாய் வாழி காவேரி"** திட்டத்தினை பாராட்டி, இதேபோல் நாட்டிலுள்ள ஜீவநதிகளில் செயல்படுத்த **மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்கள் நாடாளுமன்ற கூட்டத்தில் தனது உரையில் இத்திட்டத்தினை குறிப்பிட்டுள்ளார் என்பதை பெருமையுடன் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவிக்க விரும்புகின்றேன்.**

இதேபோன்று, தமிழகத்திலுள்ள பவானி, வைகை, அமராவதி, தாமிரபரணி ஆறுகளும் மாசுபடுவதைத் தடுக்க மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதேபோன்று, **வைகை மற்றும் நொய்யல் ஆறுகளுக்கு புத்துயிர் அளிக்கும் திட்டம்** நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.24.58 கோடி மதிப்பீட்டில் 2017–18 முதல் மூன்று ஆண்டுகளுக்கு செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டு **2018–19**ஆம் ஆண்டு வரை **ரூ.14.06** கோடி செலவீனம்

மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், **பாலாறு ஆற்றிற்கு புத்துயிர் அளிக்கும் திட்டம் 2019–20**ம் ஆண்டு முதல் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு புதிய நீர் மேலாண்மை திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. முக்கியமாக, நீர்நிலை ஆதாரங்களை பொதுமக்கள் பங்களிப்புடன் தூர்வாரும் **குடிமராமத்து திட்டம்**, **தமிழ்நாடு நீர் மேலாண்மை இயக்கம்** ஆகியவற்றை இங்கு குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்குத் தடை என்னும் திட்டத்தினை முன்னெடுத்தபோது ஒவ்வொரு குடிமகனும் அதனை ஆதரித்து, தங்களது பழக்கங்களில் மாற்றத்தினைக் கொண்டு வந்தததினால்தான் இத்திட்டம் வெற்றி பெற்றுள்ளது என்பதை இந்நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் தொடர மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை என்னும் திட்டத்தினை இந்தியா முழுவதும் செயல்படுத்த அறிவிப்பு செய்துள்ளதை இந்த நேரத்திலே நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இதுபோன்ற நடவடிக்கைகளை அரசு செயல்படுத்துவதோடு மட்டுமல்லாமல், தன்னார்வலர்களும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் பொது மக்களும் இணைந்து ஒரு மக்கள் இயக்கமாகச் செயல்படுத்த வேண்டும். உதாரணமாக, மாண்புமிகு அம்மா அவர்களின் **"மழை நீர் சேகரிப்பு திட்டம்"** எப்படி மக்கள் இயக்கமாக மாற்றப்பட்டதோ அதுபோல, மரங்கள் நட்டு நதியைப் பாதுகாக்கும் திட்டத்தையும் மக்கள் இயக்கமாக நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயல்படுத்த வேண்டும்.

பொதுமக்கள் தங்கள் குழந்தைகளின் பிறந்த நாள் கொண்டாட்டம், திருமண நிகழ்ச்சி, திருமண ஆண்டு விழா நிகழ்ச்சி போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளின்போது மரக்கன்றுகளை வழங்கினால் இந்தத் திட்டம் இன்னும் விரிவடையும். மரக்கன்றுகளை முறையாக நட்டு வளர்த்தால் காடு செழிக்கும். நாடு செழிக்கும்.

உதாரணமாக ஒன்றைச் சொல்கிறேன். புதுக்கோட்டை மாவட்டம், சேந்தக்குடியைச் சேர்ந்த பாரம்பரியமான விவசாய குடும்பத்தைச் சேர்ந்த திரு.தங்கசாமி, ஆரம்பத்தில் நவீன விவசாயத்தில் லாபமும் மனநிறைவும் கிடைக்கவில்லை என்பதனால், தன்னிடமுள்ள பத்து ஏக்கர் நிலப்பரப்பில் காடு வளர்க்க ஆரம்பித்தார். யார் அவர் வீட்டிற்கு வந்தாலும் சரி, எவர் வீட்டிற்கும் அவர் போனாலும் சரி மரக்கன்று ஒன்றினை நட்டு விடுவார். வீட்டில் எந்த விசேஷமானாலும் மரக்கன்றினை நட்டு விடுவார். இதனால் சேந்தக்குடி கிராமத்தில் நுழையும்போது காற்றில் ஒரு குளுமையை உணர முடியும். எங்கும் பசுமையே

வியாபித்திருக்கிறது. இன்று அவர் கைப்பட்ட மரக்கன்றுகள் மாவட்டம் முழுவதும் முளைத்து கிடக்கின்றன. அவரது மகன் கல்யாணம் அன்று மட்டும் ஊரில் 10 ஆயிரம் மரக்கன்றுகளை கொடுத்துள்ளார். அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, இஸ்ரேல் எங்கெங்கோ இருந்த வருகின்ற மாணவர்கள் இவரிடம் காடு வளர்ப்பு பற்றிய அறிவுரைகளை பெற்றுச் செல்கின்றனர். இது போன்று நாம் அனைவரும் செய்ய முனைந்தால், நம் நாடு சோலைவனமாக மாறும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு பல்வேறு நிலைகளில் நதிகளையும் வனங்களையும் பாதுகாக்கும் வண்ணம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்நாளில், காவேரி நதியைப் பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில், சத்குருஜி அவர்கள் **“காவேரி கூக்குரல்”** என்ற ஒரு இயக்கத்தை துவங்கியுள்ளது பெருமை அளிக்கிறது என்பதை இந்த நேரத்தில் நினைவுகூற கடமைப்பட்டிருக்கின்றேன். தலைக்காவேரியில் அவருடைய பயணத்தைத் துவக்கி வைத்து, இன்றைக்கு சென்னை வந்தடைந்திருக்கின்றார். வருகின்ற வழியெல்லாம் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கின்றார்.

இதுவரை 69,000 விவசாயிகள் வேளாண் காடுகள் குறித்து பயிற்சி பெற்றுள்ளனர் என்ற விவரம் அறிந்தேன். இந்த இயக்கத்தை அடுத்து வரும் 12 வருடங்களுக்குள் இதைப் படிப்படியாக மக்களிடம் பெரிய அளவில் எடுத்துச் செல்வார்கள் என்று அறிகிறேன். இவ்வியக்கத்தின் வாயிலாக 242 கோடி மரங்களை நடுவதற்குத் திட்டம் தீட்டியுள்ளார்கள். இது வரவேற்கத்தக்கது. இந்தியாவிலேயே அதிக மரக்கன்றுகளை நடுகின்றவர் சத்குருஜி அவர்கள் தான் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டு மக்கள் அனைவரும், குறிப்பாக இளைஞர்கள், பெண்கள் பெருவாரியாக மரம் வளர்ப்புப் பணிகளில் தொடர்ந்து பங்கேற்று தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாக உருவாக்க மாண்புமிகு அம்மாவின் அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் ஒத்துழைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, சத்குருஜி அவர்கள் எடுக்கும் முயற்சிக்கு எங்களுடைய அரசு துணை நிற்கும் என்று சொல்லி,

242 கோடி மரங்களையும் நடுகின்றபொழுது நிச்சயமாக இயற்கை வளம் பெருகும். அந்த இயற்கை வளம் பெருகின்றபொழுது நல்ல காற்று மற்றும் ஆரோக்யமான வாழ்வு கிடைக்கும். நல்ல மழையும் கிடைக்கும். அனைத்தும் கிடைக்க வேண்டுமென்று சொன்னால் நாம் 242 கோடி மரங்களையும் நட்டு நம்முடைய சத்குருஜி அவர்களின் கனவை நனவாக்கப் பாடுபடுவோம் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**